REGISTERED No. M. 1318.

ஓம்.
நாமகள் நற்றுணை.

தமிழ் மகவு.

புதுவைத் தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் வெளிவரும்
தமிழ்ப் பத்திரிகை.

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினுங் கற்கை நன்றே.

ஆண்டு – ௧.	பிங்கள வருஷ பங்குனி மீ 1918-ம் ஆு மார்ச்சு மீ	மதி – ௬.

உள்ளுறை:

பக்கம்.
௧. பாண்டியன் ஆரியப்படைதந்த நெடுஞ்செழியன். ௬௧.
௨. பத்துப்பாட்டு. ... ... ௬௪.
௩. நற்றுணை. ... ... ௬௫.
௪. கல்வி. ... ... ௬௮.
௫. மாலைமாற்றுக்கவி. ... ... ௬௯.
௬. எப்படியிருந்தால் இல்லறம் இனிது நடக்கும்? ... ௭0.
௭. நாம் எதனை விரும்புவது? ... ... ௭௧.

பத்திராசிரியர்:— வீ. துரைசாமி முதலியார்,
கவர்ன்மெண்ட் கல்விச்சாலைத் தமிழ்ப் பண்டிதர்.
புதுவை.

வருடச் சந்தா விவரம்:

உள்ளூர்க்கு ... ரூ ௨	வெளிநாட்டுக்கு ... ரூ ௧
வெளியூர்க்கு ... ரூ ௩	தனிப் பிரதி ... அணா ௧

புதுவைத் தமிழ்ச் சங்கம்
முதலாவதாண்டு நிறைவு வைபவம்.

நிகழும் பிங்கள ௵ மாசி ௴ ௨௮௳ (11-3-18) சோம வாரம் மகா சிவராத்திரி கூடிய புண்ணிய தினத்தில் இரவு ௭-மணிக்குப் புதுவைத் தமிழ்ச்சங்க அவயவிகள் பல அன்பர்களுடன் குழுமிக் கீழ்வருமாறு முதலாவதாண்டு நிறைவின் வைபவம் சிறப்புற நடாத்தினர். சங்கத் தலைவராகிய ஸ்ரீமத் சொ. வேலாயுத முதலியாரவர்களே சபா நாயகராக அமர்ந்திருந்தனர். கடவுள் வாழ்த்துக் கூறப்பட்டது. சபாநாயகர் முகவுரை கூறிய பின்னர், காரியதரிசி அவர்கள் முதல் வருஷத்தில் நடந்த முக்கிய விஷயங்களனைத்தும் எடுத்துக்கூறி முடித்தனர். பின் சங்கத்தின் அங்கத்தினர் ஸ்ரீமான் சோமசுந்தர முதலியார் அவர்களால் "அன்பு" என்னும் விஷயம் சுருக்கமாகவுந் தெளிவாகவும் ௭-மணிமுதல் ௭½-மணிவரையில் உபந்நியசிக்கப்பட்டது. பிறகு சபையின் உதவி அக்கிராசனாதிபதி ஸ்ரீமான் தெ. முத்துக்குமாரசாமி முதலியாரவர்களால் ௭½-மணிமுதல் ௮-மணிவரையில் "சிவராத்திரி மகிமை" என்பது சுருக்கி மிகத் தெளிவாகவும் கேட்பவர்க்கு, இனிமையாகவும் அழகாகவும் உபந்நியசிக்கப்பட்டது. அதன் பின்னர்ச் சங்கத்தின் காரியதரிசி ஸ்ரீமான் வீ. துரைசாமி முதலியாரவர்களால் ௮-மணிமுதல் ௯½-மணிவரையில் "தமிழ்க் கல்வி" என்பது மிகத்தெளிவாக இனிமையுடன் பல மேற்கோள் காட்டி, இவை பயன் இன்னவற்றை இன்னவாறு கற்க. என விரித்து உபந்நியசிக்கப்பட்டது.

உடனே சபாநாயகர் முடிவுரை கூறினர். கடவுள் வாழ்த்து நிகழ்ந்தது. சபையில் வந்தவர்கட்கு விநியோகம் செய்யப்பட்டது. இச்சங்கம் இனி ௨-ம் ஆண்டு நிறைவில் இதைவிட மிக்க சிறப்புற நடக்கவேண்டுமென்று கூடலாலவாயின்கண் புலவர்களுக்குள் நடுநாயகமாக வீற்றிருந்து தமிழாராய்ந்த இறைவன் நறைமலரடியை என்று மிறைஞ்சுகின்றேன்.

இங்ஙனம்:
ர. ஸ்ரீநிவாசன்.
உதவி காரியதரிசி, புதுவைத் தமிழ்ச்சங்கம்.

ஓம்.
நாமகள் நற்றுணை.

தமிழ் மகவு.

புதுவைத் தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் வெளிவரும்
தமிழ்ப் பத்திரிகை.

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினுங் கற்கை நன்றே.

ஆண்டு – ௧. } பிங்கள ௵ பங்குனி ௴ / 1918-ம் ஆ௵ மார்ச்சு ௴ { மதி – ௬.

பாண்டியன் ஆரியப்படைதந்த நெடுஞ்செழியன்.

[illegible]தொன்மாப்பறவைபோற் பயன்கொள்வான் பதினெண் தேய மாந்தரும் கிளர்ந்த சொற்றிரட்சிதான் தூய மாயை காரிய வொலியன்றி வான்முதற் கருவினுய காரிய வோசையேயாய்க் கிடந்த மதுரைமாநகரை இராசதானியாகக்கொண்டு ஆண்ட மன்னர் பலருள் நெடுஞ்செழியன் என்னும் பெயரினையுடையார், இதுகாறுந் தெரிந்தவரையில் இருவராவார்; நெடுமாறன் என்னும் சொல்லுக்கு நெடுஞ்செழியன் என்று பொருள்படு மாயினும் செழியன் என்றே கூறப்படுவோர் இருவராவர். அவருள் ஒருவன் ஆரியப்படைதந்த நெடுஞ்செழியன், மற்றையவன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன். பின்னையவன் முன்னவனது பேரன். ஆகையால், முன்னவனை முதலாம் நெடுஞ்செழியன் என்றும் பின்னவனை இரண்டாம் நெடுஞ்செழியன் என்றும் கூறப்படும்.

முதலாம் நெடுஞ் செழியனைப் பற்றியதே ஈண்டாராய்ச்சியாகையான், இவன் ஆரியப்படை தந்த நெடுஞ்செழியன் (புறம் 183) என்றும், “வடவாரியர் படைகடந்து தென்றமிழ்நாடு ஒருங்

குகாணப் புரைதீர் கற்பிற்றேவி தன்னுடன் அரசு கட்டிலிற் றுஞ்சிய பாண்டியன் நெடுஞ்செழியன் (சில—பக்கம் 449) என்றும் சொல்லப்பட்டாலும், தந்த, கடந்த என்ற சொற்கள் இரண்டும் ஆரியச்சேனையை ஜயித்த என்றே பொருள்படுமென்பர் பெரியோர்; இதுவே, காலஞ்சென்ற வி. கனகசபைப் பிள்ளை, மகாமகோபாத்தியாய வே. சாமிநாதையரவர்கள், சென்னைச் சர்வகலா சங்க சரித்திர ஆசிரியர் ராவ்பகதூர் S. கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள் போன்றவர்கள் கொள்கையாகும்.

இவன் போரில் மாத்திரமன்றி மற்றைக் கலைகளிலும் வல்லவனுயிருந்தானென்பது இவன் பாடிய (புறம் 183-வது) பாட்டாலும், சிலப்பதிகாரக் கதா நாயகனை கோவலனைக் கொலைசெய்வித்தபொழுது கண்ணகி, தன் சிலம்புகொண்டுவந்து அரசன் முன் நின்ற வளவிலே,

பெண் அணங்கே!

கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று.
வெள்வேற் கொற்றம் காண்! என, ஒள்ளிழை
நற்றிறம் படராக் கொற்கை வேந்தே!
என்காற் பொற்சிலம்பு மணியுடை அரியே
என, (அரசன் தேவி)
தேமொழி யுரைத்தது செவ்வை நன்மொழி;
யாமுடைச் சிலம்பு முத்துடை யரியே.
தருகெனத் தந்து தான்முன் வைப்பக்
கண்ணகி யணிமணிக் காற்சிலம் புடைப்ப
மன்னவன் வாய்முதற் றெறித்தது மணியே.
மணிகண்டு (அரசன்)
தாழ்ந்த கொடையன் தளர்ந்த செங்கோலன்
பொன்செய் கொல்லன் றன்சொற் கேட்ட
யானோ வரசன் யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென் ஆயுளென
மன்னவன் மயங்கி வீழ்ந் தனனே.

என்பது கொண்டும் தெளியப்படும்; இவன் கல்வி வல்லவனும் செங்கோலனும், சீலமுடையனுயு மிருந்ததாலன்றோ தான் செய்த பிழை தெரிந்தமட்டிலே உயிர் துறந்தனன். (சில-மதுரை-இறுதியிற்காண்க.)

இவனது காலத்திலே மதுரையம்பதி வெகு செழிப்பாக இருந்ததென்பது: —ஓங்கிரும் பரப்பின்

வங்க வீட்டத்துத் தொண்டியோ ரிட்ட
அகிலும் துகிலும் ஆரமும் வாசமும்
தொகுகருப் பூரமும் சுமந்துடன் வந்த
கூடல் (சிலப்-XIV 107-110)

என்றதற்கு அடியார்க்கு நல்லார் குணதிசைக்கண் தொண்டியென்னும் பதியிலுள்ள அரசர் வங்கத்திரளொடு சுமந்து வந்த என்று பொருள் கண்டதால் தெரியலாகும். அன்றியும்,

"கடிமதில் வாயில் காவலிற் சிறந்த
அடல்வாள் யவனர்" எனப்படும்,

யவனப் (GREEKS) படையினை யுடையானென்றும் அறிகிறோம். ஊரிலே, நுதல்விழி நாட்டத்து இறையோன்கோயிலும், உவணச் சேவல் உயர்த்தோன் நியமமும், மேழிவலனுயர்த்த வெள்ளை நகரமும், கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும், அறத்துறை விளங்கிய அறவோர் பள்ளியும் இருந்தன.

இவ்வளவு சிறப்போடு ஆண்ட பாண்டியனாகிய இந்நெடுஞ்செழியன் காலம், சோழன் கரிகாற் பெருவளத்தான் காலமாகும். சோழன் கரிகாற் பெருவளத்தான்,

தொக்க கலியின்மூ வாயிரத்துத் தொண்ணூற்றில்
மிக்க கரிகால வேந்தனுந்தான்–பக்கம்
அலைக்கும் புகழ்ப்பொன்னி யாறுகரை யிட்டான்
மலைக்கும் புயத்தா னுவந்து.

என்பதால் கிறிஸ்தாப்த ஆரம்ப காலத்தி லிருந்தவனென்பது தெளியப்படும். (தொடரும்.)

S. சோமசுந்தர தேசிகர்,
திருவாரூர்.

பத்துப்பாட்டு.

(௫௭-ம் பக்கத் தொடர்ச்சி.)

௫-வது முல்லைப்பாட்டு:—இது ௱௩-அடிகளுடையது; பகைமேற் சென்ற தலைவன் வருமளவும் தலைவி ஆற்றி யிருந்தவிடத்து, அவன் வந்ததைக்கண்டு தோழி முதலிய வாயில்கள் தம்முட் கூறியதாகப் பாடப் பட்டது.

இதற்கு முல்லையென்று பெயர் கூறினர்; முல்லைசான்ற கற்புப்பொருந்தியதனால். இல்லறநிகழ்த்துதற்குப் பிரிந்து வருந்துணையும் ஆற்றியிருவென்று கணவன் கூறிய சொல்லைப் பிழையாமல் ஆற்றியிருந்து இல்லறநிகழ்த்திய இயற்கை முல்லையாம் என்று கருதி இருத்தலென்னும் பொருடரு முல்லையென்று இச்செய்யுட்கு நப்பூதனர் பெயர் கூறினமையிற் கணவன் வருந்துணையும் ஆற்றியிருந்தாளாகப் பொருள் கூறலே அவர் கருத்தாயிற்று. தொல்காப்பியத்துப் பொருளதிகாரம் அகத்திணையியலில்—"தானேசேறல்" என்னும் ௨௭-ம் சூத்திரத்து விதியால், அரசன் தானே சென்றது இப்பாட்டு. இதில் தலைவனைப் பிரிந்து தனித்திருக்கும் தலைவியி னியல்பும், கார்காலத்தின் தன்மையும், படைவீட்டிற் பகைவர் துயரத்தோடு இருத்தலும், தலைவனது சௌரியமும் விளங்கக் கூறப்பட்டுள.

இப்பாட்டு "நனந்தலையுலகம் வளைஇ நேமியொடு" எனத் தொடங்கி,
"வினைவிளங்கு நெடுந்தேர் பூண்டமாவே" என முடிந்துளது.

"இன்றுயில் வதியுநற் காணாள் துயருழந்து
நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு
நீடுநினைந்து தேற்றியும் ஓடுவளை திருத்தியும்
மையல் கொண்டும் ஒய்யென வுயிர்த்தும்
ஏவுறு மஞ்ஞையி னடுங்கியிழை நெகிழ்ந்து
... ...
முடங்கிறைச் சொரிதரும் மாத்திர ளருவி
இன்பல் லிமிழிசை யோர்ப்பனள் கிடந்தோள்"

இவை தலைவனைப் பிரிந்த தலைவியினியல்பு.

"செறியிலைக் காயா அஞ்சனம் மலர
முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடற் குவிமுகை யங்கை யவிழத்
தோடார் தோன்றி குருதி பூப்பக்

கான நந்திய செந்நிலப் பெருவழி
வானம் வாய்த்த வாங்குகதிர் வரகிற்
றிரிமருப் பிரலை யொடு மடமா னுகள
எதிர்செல் வெண்மழை பொழியுந் திங்களில்''

இவை கார்காலத்தின் இயல்பை இனிமையாக எடுத்து விளக்குதல் காண்க.

முக்கிய கருத்து :— தலைவன் வினைவயிற்பிரியக் கருதியதனை அவன் குறிப்பானுணர்ந்து ஆற்றாளாய தலைவியது நிலைமைகண்டு அவன் வற்புறுப்பவும் உடம்படாதவளைப் பெருமுது பெண்டிர் அவன் வினை முடித்து வருதல் வாய்வது, நீ வருத்த நீங்குவதெனக்கூற, அதுகேட்டு அவள் நீடுநினைந்து ஆற்றியிருந்தவழித் தலைவன் அக்காலத்தே வந்த தனைக்கண்டு வாயில்கள் தம்முட் கூறியதாம்.

(தொடரும்)

பத்திராசிரியர்.

நற்றுணை.

சாகரம் சூழ்ந்த நற்றரணிமிசைச் செய்தவப்பேற்றால், புகறற்கும், பெறற்குமரிய மானுட உருவினைப் பெற்ற மாண்புடையீர்! சிற்றுயிர்க்கு உற்ற "நற்றுணை" யாதெனவே சிறிதாய்குவம். அவண் ஆயுங்கால், ஈசனை வேண்டி இயற்றொணாத்தவங்கள் செய்து, பூசுரர்க்கீதலாதி புண்ணியச் செயல்களாற்றி, ஏசறச் சூலாய்ப் பற்பல் இடரெலாந் தாங்கிப் பெற்று வளர்த்ததாயும், அரிதினிலீட்டிய பொருள்யாவையும் ஒருசிறிது நோக்காது செலவிட்டு நம் நயமே பெரிதுங் கருதி நம்பொருட்டே உழைக்கும் நற்றந்தையும், இம்மை மறுமைப் பயன்களை யெளிதினில் அடைதற்கேதுவாயும் இல்லறத்திற்கோர் ஊன்றுகோலாயும் நம்மையின்றிப் பிறிதொரு வழியிலாது நம்மையே பெரிதும் சார்ந்திருக்கும் நேசநன் மனையாளும், "புத்" எனும் நரகம் நீங்கி வானவர்தம் ஊர்புகச் சாதனமாய் உற்றதோர் மைந்தனும், நம்முடன் பிறந்த நம் நற்சோதரரும், நமக்குற்ற நற்சுற்றமும், செய்தவப்பேற்றால் சென்றடைந்திடற்குரிய செல்வமும் என இவர்களெலாம் உண்மையில் ஒரு சிறிதும் துணையிலராவர்.

ஓர்கால் வளம்பலவற்றினும் சிறந்த கஜேந்திரபுரியை மனுநீதி தவறாது பரிபாலனஞ்செய்து வந்த பண்டைநாள் மன்னருளொருவரான "தானவ மகாராஜன்" எனும் பூபதி பிணியால் வருந்தியபோது தன்

அருந்தவத்திலுதித்த இளவரசாம் மானவமகாராஜனைத் தன்பக்கலிருத்தி, "ஹே! செங்கைவளவரசே! இப்புவிதனில் யாரே உற்ற நற்றுணை நமக்கு உளர்? உளரேல் சொல்லுதிமைந்த!" என்றியம்பினன்.

அன்னவன் வினவிற்கு "ஏன் உலகினிலுதித்த ஒருவனுக்கு அவனை அரிதினில் பெற்றெடுத்த தந்தைதாய் இராவிலும் பகலிலும் வாழ்விலும் தாழ்விலும் துணையிருப்ப, 'யாரே உற்ற நற்றுணை நமக்குளர்?' என ஐயமுற வினவிய தென்கொல்?" என மதிமானவ இளவரசு சொற்றனன். தானவன், "என்னே மைந்த!, தந்தையும் தாயும் ஓர் துணையெனச் சாற்றினை. தந்தை சிந்தைக்கு எதிர்சொலின் தந்தைத்துணையும், சேய்க்கு வறுமைவந்திடின் தாய்த்துணையும், இலவாய்த்தீர்ந்திடு மாகலின், தந்தையும் தாயும் ஓர் துணையோ! ஆய்க" என்று செப்பினன்.

மானவன் பெரிதும் ஆய்ந்து "தந்தையே! மனைவிமக்கள் ஒருதுணையென நவிலலாகாதோ?" என்று இயம்பினன். அதற்குத் தானவன், "அப்பா! மைந்த! மனைவி ஓர் துணையென ஆயுங்கால், பாழ்த்தபிணிவரில் பறந்திடும் அம்மனைவியின் துணை யென்னும்? மக்கள் ஓர் துணையன்றென்பதற்குக் குசலவர் சரிதமே போதியசான்றாம். தீதறவே 'இதமுறல் எந்நாள் செயால்? பெறுதல் வளர்த்தல் முதலாக என்றுந் துன்பமே' ஆகலின், மனைவியும் மக்களும் ஓர் துணையிலராம்" என்றனன்.

மானவனோ மனதிற் பெரிது மெண்ணி இம்முறை, "தந்தாய்! என்னென்றறைகுவன்! உடன்பிறந்த சோதரரும், உற்றநற்சுற்றமும் துணையெனக் கூறலாகுமோ?" என ஐயமுற மொழிந்தனன். தானவன், "ஹே! மானவமணியே! சோதரர் துணையைத் தந்தையின் தனமது பகிரும்போழ்து நீ பார்த்திலைபோலும். இவர்களோ! ஆந்துணை. இலை. இலை. சுற்றம் துணையெனின், அவர்கள்பால் குற்றம் பார்க்கில் அச்சுற்றமும் போமே. ஆகலின், சோதரரும் சுற்றமும் நமக்குற்றதுணை யிலைபார்" என்றனன்.

மானவன் பெரிதும் ஆராய்ந்து கடையில், "செல்வமே துணை" யெனச் செப்பினன்.

தானவன், "அப்பா! செல்வம் என்பதன் பொருள் அறிந்திலையோ? பூமி முதலாப் பொருந்தியயாவும் ஆந்துணையெனவே செப்புதலும் தப்பாம். போங்கால் சொல்லாமல் செல்வம் சென்றிடும். ஆகலின், செல்வம் துணையன்றாம். அத்தமும் வாழ்வும் அகத்துமட்டே. மெத்திய மாதரும் வீதிமட்டே. மக்களும் சுற்றமும் சுடுகாடுமட்டே. செல்வமும் நம்வினை மட்டாம். என்று ஆன்றோர் அறையக்கேட்டிலையோ? இனி,

இவையெலாம் துணையென நாடுதல் ஒழிதி. நலமே ஈந்திடும் நற்றுணையே நாடுதி" யென மொழிந்தனன்.

மானவன், "தந்தையாகிய எம்முதற்குருவே, நற்றுணையாம் மெய்த்துணை அடியேனுய்யுமாறு விளம்பல்வேண்டும்" என்று பரிந்துவேண்டினன். "மெய்த்துணையாதெனவே விளம்பக்கேட்டமைந்த, அம் மெய்த்துணை சாதன சதுட்டயம் தந்திடவல்லது; இப்புவிதனில் குறைவிலாப் பெரும்புகழ் ஈந்திடவல்லது. சிந்திப்பின் சிற்றுயிர்க்குற்ற கவலைபோக்க வல்லது; அதைத்தேடி நாடி அடையின் உயிர்கள் யாவர்க்கும் க்ஷேமம் தரவல்லது; அதுதான் "கல்வியும் அறனுமே" யெனக் காணுதிமைந்த! எனத் தானவன் கருணைகூர்ந்தருளினன். மானவ மகாராஜனும் 'கல்வி அறங்களையே' கடைப்பிடித் தொழுகிக் கதிபெற்றனன்.

எமதன்பீர்! யாவரும் உண்மை ஞானம் உணர்தற்கு ஹேதுவாயிருத்தலின் கல்வியும், சர்வதுக்க நீங்கிப் பரம ஆனந்தம் எய்துவதற்குச் சாதகமாயிருத்தலின் அறமுமே நற்றுணையாம்.

சே. பகவதியானந்தம்.

தூத்துக்குடி.

கல்வி.

கல்வி, களிப்புங்கலனுந் திறமுந்தரும். அதாவது: தனிமையிற் களிப்பும் பேசினுற்கலனும், தொழிலைப் பகுத்தறிந்து முடிப்பதில் திறமையுந்தரும் என்க. புத்திமான்கள் கல்வியி னுதவியின்றி ஏகதேசம் காரியங்களை நன்றாய் முடிக்கவல்லவராயினும், காரியமுழுமையு மாராய்ந்து முன்பின் யோசித்து இசைந்த கருவியைக்கொண்டு நன்றாயியற்றல் கற்றோரா லல்லாமல் மற்றோரால் முடியாது. படிப்பில் அதிககாலம் போக்கல் சோம்பேறித்தனமாம். அதனைப் பூஷணமாகவே கொள்ளுதல் டம்பமாம். கல்வியாற் றேர்ந்த விதிப்படிக்கே நடக்க விரும்புதல் கல்வி கற்பவரின் தன்மையாம். கல்வி, படிப்பவர் இயல்பை வெளிப்படுத்தி அனுபவத்தால் சிறப்படையும். இயல்பாகவே நிலத்தில் எழும் பூண்டுகளைக் களையெனக் கழிப்பதுபோல, இயற்கைத் தன்மையைக் கல்வியாற் சீர்திருத்தல்வேண்டும். அனுபவத்தால் சீராக்கப்படாத கல்வி துன்மார்க்கங்களை மட்டுங் காட்டும்.

கபடிகள் கல்வியை இகழ்வார்; மேதகர் அதைக் கண்டு மலைப்பார்; விவேகிகளதைப் பயன்பெறச் செய்வர். விவேகம், கல்விக்கு வேறுபட்டதும், விசாரணையா லறியத்தக்கதுமாம். பிறர் சொல்வதை ஆக்ஷே

பிப்பதற்கே என்றாவது, ஒன்றை முழுவதும் நம்புதற்கே யென்றாவது, அல்லது பேசிப் பொழுதுபோக்கிடற் சென்றேயாவது, கல்வியைக் கற்காமல் நன்கு ஆராய்ந்து பகுத்தறியப் படித்தல்வேண்டும். பிறர்க்கும் பயன்படுமாறு கற்றல்வேண்டும்.

சில நூல்கள் ருசிபார்க்கத் தக்கவை; சிலமென்று விழுங்கி ஜரிப்பித்துக் கொள்ளத் தக்கவை; எனவே சிலவற்றை ஏகதேசம் பார்த்தால் போதும், சில முழுமையும் படிக்கவேண்டியவை யாயினும் விசேஷக் கவனிப்பு வேண்டியதில்லை, இன்னும் சில முழுமையும் வெகு ஜாக்ரதையுடனும் ஊக்கத்துடனும் படிக்கவேண்டியவையாம்: சிறிதாயிருப்பதை அயலாரைக்கொண்டு படிப்பித்துக் கேட்பதே போதும்; இதனைச் சாதாரணமும் கௌணமுமான விஷயங்களில் மட்டும் கைக்கொள்ளுதல் வேண்டும். இப்படிச் செய்யாமல் தேர்ந்த அனுபவத்துடன் சேராத கல்வியானது வடிக்கட்டிய நீரைப்போல் ருசியற்றதா யிருக்கும். ஒருவன் படிப்பினால் பூர்ணனாகலாம்; பேச்சினால் வசியவாக்கி யாகலாம்; இவற்றினும் எழுதிப் பழகுவதால் சரியான கல்விமானாதலே மேன்மை. ஏனெனில் எழுதிவைத்த நூல்களால் அக்கல்வி பிறர்க்கு நெடுங்காலம் பயன்தருதலாலென்க. அதிகமாய் எழுதிப் பழகாதவனுக்குத் தாரணை மிகுந்திருத்தல் வேண்டும். அதிகமாகப் பேசத் தெரியாதவனுக்குத் தடையிலாச் சாதுரிய மிருத்தல்வேண்டும். ஏனெனில் அவன் தெரியாததைத் தெரிந்ததுபோற் பாவிக்கவேண்டியவன்.

சரித்திரப்படிப்பு விவேகத்தை யுண்டாக்கும். காவியப்படிப்பு சாதுரியத்தைக் கொடுக்கும். பிரகிருதி சாத்திரப்படிப்பு விஷயங்களை நுட்பமாய் ஆழ்ந்து அறியும் திறமையைக் கொடுக்கும். நீதி சாஸ்திரப்படிப்பு சேஷத்துவத்தை, அதாவது: பிறருக்குப் பயன்படுபவனாயிருத்தலைக் கொடுக்கும்.

பந்தடிக்கும் விளையாட்டால் நீரடைப்புத் தீரும். வேட்டையாடுவதால் நெஞ்சிறுகும். மெதுவாய் நடப்பதால் தீபன சக்தி மிகும். சவாரி செய்வதால் சிரசு திடப்படும். இவைபோலவே யுத்தியைத் தடுக்குந் தடைகளை நீக்கவும் தகுந்த சிகிச்சைகளுண்டு. சஞ்சல சித்தமுள்ளவன் கணிதம் படித்தல் வேண்டும். ஏனெனில் நிரூபணங்களில் கவனம் கொஞ்சம் நழுவினாலும் மறுபடி தொடங்கவேண்டிவரும். தாரதம்மிய ஞானமில்லாதவன் வேதாந்த சாஸ்திரம் படித்தல் வேண்டும்; ஏனெனில் வேதாந்திகள் நுட்பமாகிய அணுவையும் பிளந்து பேசுந் திறம் வாய்ந்தவர்கள். ஒரு பெருங் கூளமாகிய குவியலிலிருந்து சாரத்தைப் பொறுக்

கிச் சேர்க்குஞ் சத்தியில்லாதவன் வக்கீல்களின் வழக்குக்களடங்கிய கட்டுக் கட்டாய்க் குவிந்து கிடக்கும் லிகித ஆதாரங்களையும், ஆதாவுகளையும் படித்தறியவேண்டும். இப்படியே மனோ வியாதிக ளொவ்வொன்றிற்கும் தக்க பரிகாரங்களுளவாம். இம் முறைகளை அறிந்தார்பால் ஆய்ந்து கல்வியைக் கற்பதே நலமாம்.

தி. வேங்கடராம ஐயங்கார்,
தமிழ்ப் பண்டிதர்.
புதுவைவாசி.

மாலைமாற்றுக்கவி.

கவி:— ஆசு - மதுரம் - சித்திரம் - வித்தாரம் என நால்வகையாம். இவற்றில், சித்திரகவி-கோமூத்திரி, கூடசதுர்த்தம், மாலைமாற்று முதலிய பலவாம். அவைகளில்,

மாலைமாற்றுவது: ஒரு செய்யுளை ஈற்றிலிருந்து படித்தாலும் முதலிலிருந்து படிக்கும்போது முடிவதுபோலவே முடியும். அது கவியின் சொல்லலங்காரமாம்.

(மாலை-வரிசை; மாற்று-மாறுவது.) (உ-ம்)

க—நீவாத மாதவா தாமோக ராகமோ
தாவாத மாதவா நீ.

உ—வாயாயா நீகாவா யாதாமா தாமாதா
யாவாகா நீயாயா வா.

இக்குறள் வெண்பாக்களை ஈற்றெழுத்துத் தொடங்கிப் படித்தாலும் முதலிலிருந்து படிப்பது போலவே நிற்றலறிக.

(க) உரை:—நீவாத-நீங்காத; மாதவா-பெருந்தவமுடையோனே!; தாமோகம்-வலிய மயக்கத்தால் வரும்; ராகமோ-ஆசையோ; தாவாது-நீங்காது; அம்மாது - அழகிய பெண்ணினது; அவா - ஆசையை; நீ-நீக்குவாயாக.

கருத்து:—எமதுபெரும! நந்தலைவியினது ஆசை அடங்கிற்றிலது; அதனை நீயேவந்து கலந்து நீக்கக்கடவாய் என்பதாம். நீத்தல் என்னும் வினையின் பகுதி - நீ என நின்றது. இக்கவி ஒற்றெழுத்து (மெய்யெழுத்து) இன்றிவந்தது. குறிலும் நெடிலும் நேர்ந்தடுக்கி வந்ததால் 'சித்திரவண்ணம்' எனப்படும்.

(உ) உரை:—வாயாயா-கிடையாதன; யா-எவை?; நீ காவாய்-நீயே காத்துக்கொள்; யாதாம்-எதுவாகும்!; (மாதா மாதா) மாது மா தா ஆம்-

இப்பெண் மிக்க வருத்தமுறுவள்; யாஆகா - நினக்கு எவை ஆகாதகாரியங்கள்?; (நீயாயா வா) ஆயா நீ வா—ஆயனே! நீ வருக.

கருத்து:—ஆயனே! நின்னால் ஆகாதசெயல் என்னையுள? எங்கட்குக்கிடையாத பொருள் எவை? நீ காவாயாகில் என்னாயோ? எமது தலைவி மிக்க வருத்த முறுகின்றாள். விரையவந்து (அதனை நீக்குதி.) என்பதாம். இக்கவியும் ஒற்றின்றிவந்தது. நெடிலே முற்றும் வந்ததால் யாப்பிலக்கணத்தில், இதனை நெடுஞ்சீர்வண்ணம் என்பர்.

(இக்கவிகள் போன்றவை, பின்னர்ச் சமையம் வாய்ப்புழி வெளியிடப்படும்.) (பத் - ர்.)

எப்படியிருந்தால் இல்லறம் இனிது நடக்கும்?

இருபகடுகள் (எருதுகள்) பூண்டிழுத்தற்குரிய பண்டிபோன்ற கிரகஸ்தாச்சிரமம் என்னும் இல்லறம், காதலித்தகணவன் மனைவி இருவரும் கருத்தொருமித்து ஆதரவுபட்டுச் செய்வதே இன்பத்திற்குக் காரணமாம். அடியிற்குறிக்கும் முக்கிய விஷயங்களைக் கவனமாகவும் அ[illegible]ப்படாமலும் படித்து நன்றாய் ஆலோசித்து நடக்கவேண்டும். படிக்கத்தெரியார்க்கும் படித்துக்காட்டி விளக்கமுறத் தெளிவித்தல்வேண்டும்.

இம்மையில் இல்வாழ்க்கையினால் உண்டாகும் சுகத்தை மிகுதியாக அனுபவிக்கத் தகுந்தவழி யாதெனில் ஒற்றுமையேயாம்.

கணவன் மனைவி இருவரும் ஒருவருக் கொருவர் நடந்துகொள்ள வேண்டிய முறைகள்:—

க. கணவன் மனைவி இருவரும் தங்கள் தங்கள் தனிச்சுகத்தைப் பாராட்டாமல் புருஷன் பெண்சாதியினுடைய சுகத்தையும், பெண்சாதி புருஷனுடைய சுகத்தையும் எப்பொழுதும் கருதி நடத்தலே முதற்குணமாம்.

உ. கணவன் கோபிக்கும்போது மனைவி பொறுத்துக்கொண்டும், மனைவி கோபிக்கும்போது அல்லது வெறுக்கும்பொழுது கணவன் பொறுத்துக்கொண்டும் இருக்கவேண்டுமே யொழிய இருவரும்சேர்ந்து ஏககாலத்தில் பதறி ஒருவர்மேல் ஒருவர் கோபித்துக் கொள்ளலாகாது.

ந. தனியாய் இருக்கும்போதாவது அல்லது வேற்றுமனிதர் வந்திருக்கும்போதாவது கணவனைக்குறித்துப் பெண்சாதியாவது, துணைவி

யைக்குறித்துக் கணவனாவது மனவருத்த முண்டாகப் பரிகாசமாய்ப் பேசக்கூடாது.

ச. தங்கள் வீடு தீப்பற்றி எரியும்போது உரத்துப் பேசுவதுபோல மற்றவேளைகளில் தம்பதிகள் (ஆண்-பெண்) உரத்துப் பேசலாகாது.

௫. கணவன் இஷ்டப்படி மனைவியும், மனைவி இஷ்டப்படி கணவனும் ஒத்து நடந்து கொள்ளக்கூடிய வரையில் முயலவேண்டும்.

சூ. பிரதிதினமும் அவரவர் தங்கள் தங்களுடைய கோரிக்கை அல்லது ஆசைகளை அடக்க வழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும்.

எ. தவறு நடந்தது நிச்சயமென்று தீரத்தெரிந்தால் ஒழிய அதை எடுத்துப் பிரஸ்தாபிக்கப்படாது. எவ்வேளையிலும் பிரீதியாகவே பேச வேண்டும்.

அ. எப்போதோ நடந்த தப்பிதங்களைச் சொல்லி ஒருவரை ஒருவர் பழிக்கக்கூடாது.

கூ. உலகத்தில் யாரை அசட்டை பண்ணினாலும் பண்ணலாம், தம்பதிகள் ஒருவரை ஒருவர் அசட்டை பண்ணலாகாது.

க0. தம்பதிகளில் ஒருவரை ஒருவர் ஏதாவது செய்யும்படி வேண்டிக்கொண்டால் மற்றொருவிசை சொல்வதற்கு முன்னமே அவர்கள் வேண்டுகோளை நிறைவேற்றவேண்டும்.

கக. தம்பதிகளில் ஒருவரை மற்றொருவர் அவமதித்துப் பேசலாகாது. அப்படிப் பேசுவது கௌரவத்துக்குக் குறைவாகும்.

(தொடரும்)

தர்மோபதேசி.

நாம் எதனை விரும்புவது?

(சூ0 - ம் பக்கத் தொடர்ச்சி.)

இதுகாறுங் கூறிவந்த புத்திரன் - ஸ்திரீ - தனம் - சரீரம் இவர்களை விரும்பலாது விவேகிகட் கழகு அன்றென்றது, இவைகளை முற்றும் ஒழித்தற் பொருட்டன்று; ஆனால், இவைகளை நாம் ஈசுரனால் உண்மைச் சுகத்தை அடைதற்குச் சாதனமாகக் கொடுக்கப்பட்டதென்று உணர்தல் வேண்டும். "கருவியைப் பொருளென்றெண்ணிக் களிப்பவர் கயவர் அன்றே" என்பது நூற்றுணிபாம்.

இனி, புருஷார்த்தம் என்பவற்றிற் சிறந்தது வீடொன்றே யாகும். அது-சிறிதும் துன்பம் அணுகாது இன்பமே சொரூபமாய் உள்ளது. அதனை நாம் அடைதற்பொருட்டு இறைவன் தனது திருவருளால், காரணத்தையும், அதற்குச் சாதனமாகத் தனுவையும், அதன் விருத்தியின் பொருட்டுப் போக வஸ்துக்களையும், அவைதோன்றுதற் கிடமாகிய புவனங்களையும் உண்டாக்கினன். இங்கு இறைவன் ஒருவன் உளன் என்பதும், அவனால் இத்தனுவாதிகள் உண்டாக்கப்பட்டனவென்பதும் அனுமானப் பிரமாண வாயிலாக அறிதற்பாலதே. இது எவ்வகைப்பட்டாரும் மறுக்கப்படாத விஷயமாம். நமக்குப் பொருள்களின் உணர்ச்சி உண்டாதற்பொருட்டு இறைவன் அநாதியே அருளிய வேதமுதலிய நூல்களை முன்னர் ஆராய்வதாலன்றிப் பொருள்களினிடத் துண்டாகும் ஐயந்திரிபு அற்ற உணர்ச்சி உளதாகாது. ஆயின், எவர்க்கும் அவ்வுணர்ச்சி இல்லையோவெனின், இயற்கை யுணர்வினனாகிய இறைவன் ஒருவனன்றி, ஏனையோர் யாவரும் அறியாமையின் வசப்பட்டிருத்தலால், அவர்க்குளதாம் பொருள்களின் உணர்ச்சி ஸ்திரமுடைய தாகாது. ஆதலின், இறைவனருளா லாக்கிய நூற்களை உத்தம ஆசிரியர்பாற் சார்ந்து ஆராய்ந்து அறிதற்கண்ணே எவர்க்கும் முதலில் வேட்கைவேண்டும். இறைவனருளிய நான்குவேதம், இருபத்தெட்டு ஆகமம், ஆறு அங்கங்களும்; நியாயம், மீமாம்சை, மிருதி, புராணங்களும்; அவைகளைச்சார்ந்து, அவைகட்கு முரண்படாது பெரியோர்களால் அருளிய பிறநூற்களும் உலகில் மிக நிரம்பி யுள்ளன. இவற்றிற்கு ஓர் எல்லை இல்லை. ஆதலின், இவைகளனைத்தையும் ஒருவர் கற்றுத் தெளிதற்கு ஆயுளின்று. உள்ள வாழ்நாள் சிலவற்றுள்ளும், இளமை முதலியவற்றாலும், அவற்றிடையிலுளவாம் பலபிணிகளினாலும் நாள் பல கழிவதால், எஞ்சிய ஆயுள் மிகக் குறைவே! ஆதலின், அதற்குள் நாம் உலகில் செய்யத்தக்கவை யாவை? விலக்கத்தக்கவை யாவை? என்பவற்றைக் கூறும் நூற்களையே முறைப்படி கற்று ஆராய்ந்தடங்கவேண்டும்.

இதனை,— "கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல—தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து"

என்னும் நாலடியார் கூறுமாற்றால் நன்கு தெளிக.

(தொடரும்)

சோ. வேலாயுத முதலியார்.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

“திருமந்திரநகரம்” எனத் தேவரும் போற்றும் தூத்துக்குடியாமித் திவ்யக்ஷேத்திரத்தின்கண்ணுள்ள ஸ்ரீ “கணேஸஸபா” வின் பதினான்காவது ஆண்டு நிறைவுவிழா வைபவம்:—

வக்கீல் குமாஸ்தாக்களால் நடைபெற்றுவரும் இச்சபாவின் ௧௪-வது ஆண்டு நிறைவுவிழா வைபவம், கொல்லம் ௧௦௯௩ ஆடு பிங்கள ௵ மாசி ௴ ௪, ௫, ௬ ௳களில் பாகவத ஸ்ரேஷ்டர்களாலும், வித்வத்ரத்னங்களாலும், “தானமோடே தவமும் தந்து தவும்” கானநிலைதன்னை இனிது நிலைநாட்டிற்று. திருமந்திரவாசிகளனைவோரையும், மற்று ஏனைய அயலூர்களினின்று விஜயஞ்செய்திருந்த யாவரையும், ஆனந்தசாகரத்தில் அமிழ்த்திற்று.

இன்னும் “சர்வ அனர்த்த நிவிர்த்தி நிரதிசயானந்தப் பிராப்தி” வடிவமோக்ஷ ஹேதுவாம் சத்ஞானங்களைச் சுருதி, யுக்தி, அநுபவம் முதலியன வாய்ந்துள்ள திட அபரோக்ஷப் பிரமஞானி க[illegible]லி, அன்னார் வெகுகாலம் அதிக கஷ்டப்பட்டுக் கற்ற சத்ஞான சாரங்களத்தனையும் வெகு சங்கிரகமாகப் பாமரரும் எளிதில் உணரும் வண்ணம் சுருங்கியகால அளவில் பிரசங்காமிருதம் பொழிந்தனர். இப்பிரசங்காமிருத சாரத்தைப் பருகிய பல்லோரும் பரமானந்த மெய்தினர்.

வந்தனோப சாரத்துடனும், மங்கள வாழ்த்துடனும் சபை இனிது நிறைவேறிற்று.

(முக்கிய குறிப்பு) இச்சபையார் கானநிலை வளர்க்குந் தகைமையும், ஏழைகளுக்கு அன்னமளித்தல் எனும் பெருங்கொடையும், சத்சரிதங்களைப் பொதுஜன உபகாரார்த்தமாகத் தக்க கானங்களுடன் சாஸ்திர யுக்தமாகப் பக்தி விஸ்வாஸத்துடன் நடத்துவிக்கும் ஓர் வள்ளற்றன்மையும் யாவரானும் நன்கு மதிக்கத்தக்கனவாம்.

சே. பகவதியானந்தம்.

தூத்துக்குடி.

அறவுரை.

மனைவி செய்திடு பாவங்கள் மகிணருக் காகும்
தனையர் செய்திடும் பாவங்கள் தந்தையர்க் காகும்
சினமில் சீடர்செய் பாவங்கள் தேசிகர்க் காகும்
அனைவ ருஞ்செயும் பாவங்கள் அரசனுக் காமால்.

(மகிணர்–கணவர்; தனையர்–பிள்ளைகள்;)

ஓர் விகடன்.

நியாயசபையில் வழக்குளகப்பட்டுவந்த ஓர் விகடனை நீதிபதியானவர் பார்த்து அப்பா! நீ குற்றவாளி என்று காட்ட உன் முகமே கண்ணாடிபோல் இருக்கிறதே! என் பொய்சொல்கிறாய் என்றார். அதற்கு அவ்விகடன் ஐயா! என்முகம் கண்ணாடி என்றால் அதில் தங்கள் முகந்தானே தெரியும் என்று கூறினான்.

விகடனுடன் வெகு ஜாக்கிரதையாய்ப் பேசவேண்டும்.

தூத்துக்குடி "சேந்தன் தியானசபை"யின் எட்டாவதாண்டு நிறைவுவிழா.

கொல்லம் ௧௦௯௫ ஆ மாசி மீ ௨௮ உ சோமவாரத்தன்று ஒட்டநத்தம் ஸ்ரீமான் ஜெகவீரபாண்டியக் கவிராயர் அவர்கள் (சற்சனசபையின் உப அக்கிராசனாதிபதி) தலைமையின் கீழ் அறிஞர் பலரால் அரும்பெரும் விஷயங்கள் உபந்நியசிக்கப்பட்டன. சபாநாயகர் அவர்கள் நம்மனோர் அனைவர்க்கும் இனிது விளங்கத் தமிழ்ப்பெருமை, அதன் வளர்ச்சி முதலியவற்றை விரித்துக் கேட்போர் உளத்திற் பசுமரத்தாணிபோற் பதியச்செய்தனர். தமிழ்க்காதலர் பலர் குழுமியிருந்த இப்பேரவை அதி சிறப்புடன் விளங்கிற்று. வந்தனோபசாரத்துடனும், மங்கள வாழ்த்துடனும் இனிது முடிவெய்தியது. நந்தமிழகத்து ஆங்காங்கு இத்துணைத் தமிழ் நலம் வளர்க்குந் தமிழ்க்காதலர் நிரம்பிய தமிழ்க்கழகங்கள் தோன்றித் தமிழணங்கினை இனிதுபோற்றி நற்பயனெய்த, மாறா இன்பநிலை தானே கொடுத்தருளவல்ல எம் ஐயனிணையடிகளை முக்காலும் தொழுதேத்துதும்.

சே. பகவதியானந்தம்.
தூத்துக்குடி.

புதுவை—சைகோன் சின்னையா பிரஸ்.